ANANDA RANGAPILLAI LIBRARY
PONDICHERRY UNIVERSITY

# ENTRANCE EXAMINATION FOR ADMISSION, MAY 2010.

## M.Phil. /Ph.D. (TAMIL)

## COURSE CODE : 257/125

Register Number :

Signature of the Invigilator
(with date)

---

COURSE CODE : 257/125

Time : 2 Hours Max : 400 Marks

*Instructions to Candidates :*

1. Write your Register Number within the box provided on the top of this page and fill in the page 1 of the answer sheet using pen.
2. Do not write your name anywhere in this booklet or answer sheet. Violation of this entails disqualification.
3. Read each question carefully and shade the relevant answer (A) or (B) or (C) or (D) in the relevant box of the ANSWER SHEET using HB pencil.
4. Avoid blind guessing. A wrong answer will fetch you –1 mark and the correct answer will fetch 4 marks.
5. Do not write anything in the question paper. Use the white sheets attached at the end for rough works.
6. Do not open the question paper until the start signal is given.
7. Do not attempt to answer after stop signal is given. Any such attempt will disqualify your candidature.
8. On stop signal, keep the question paper and the answer sheet on your table and wait for the invigilator to collect them.
9. Use of Calculators, Tables, etc. are prohibited.

1. ஐங்குறுநூற்றில் ஓரம்போகியார் தந்த பாடல்கள் எத்திணைக்குரியவை

(A) நெய்தல் (B) பாலை
(C) மருதம் (D) முல்லை

2. மாங்குடி மருதம் பற்றிய புறப்பாடலை எழுதியவர்

(A) மாறவர்மன் (B) நெடுஞ்செழியன்
(C) அறிவுடைநம்பி (D) பெருவழுதி

3. படையியங்கு அரவம் முதல் கொடைவரை உள்ள துளைகளைக் கொண்டது

(A) வெட்சித்திணை (B) நொச்சித்திணை
(C) வஞ்சித்திணை (D) கரந்தைத்திணை

4. இரங்கலும் இரங்கல் நிமித்தமும் எத்திணையின் உரிப்பொருள்

(A) மருதம் (B) நெய்தல்
(C) பாலை (D) முல்லை

5. ‘வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ’ -இத்தொடர் உள்ள நூல்

(A) குறுந்தொகை (B) திருமுருகாற்றுப்படை
(C) நற்றிணை (D) மலைபடுகடாம்

6. நன்னன் சேய் நன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது

(A) நெடுநல்வாடை (B) கூத்தராற்றுப்படை
(C) பதிற்றுப்பத்து (D) மதுரைக்காஞ்சி

7. தொண்ணூற்று ஒன்பது மலர்களை நிரல்படுத்தும் புலவர் பெயர்

(A) நக்கீரர் (B) நச்செள்ளையார்
(C) நப்பூதனார் (D) கபிலர்

8. கலித்தொகையைத் தொகுப்பித்தவர் பெயர்

(A) பூரிக்கோ (B) உக்கிரப்பெருவழுதி
(C) இளந்திரையன் (D) தெரியவில்லை

9. நான்கடி முதல் எட்டடிவரையிலான பாடல்களைக் கொண்டது

(A) ஐங்குறுநூறு (B) குறுந்தொகை
(C) நற்றிணை (D) கலித்தொகை

10. பதிற்றுப்பத்து சிறப்பித்துக் கூறும் மன்னர்கள்

(A) சேரர்கள்
(B) பாண்டியர்கள்
(C) சோழர்கள்
(D) வேளிர்கள்

11. சிற்றிலக்கியங்கள் அனைத்தும் தொல்காப்பியர் கூறும் எந்தப் பிரிவிற்குள் அடங்கும்?

(A) உவமை
(B) இறைச்சி
(C) மெய்ப்பாடு
(D) விருந்து

12. ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலையைப் பாடியவர்

(A) நம்பியாண்டார் நம்பி
(B) ஒட்டக்கூத்தர்
(C) தத்துவராயர்
(D) திரிகூடராசப்பக் கவிராயர்

13. தூது எந்தப் பாவகையால் பாடப்பெறுகிறது

(A) ஆசிரியப்பா
(B) விருத்தப்பா
(C) கலிவெண்பா
(D) கலிப்பா

14. 'இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்' எனத் தலைவி உரைப்பது எந்த நூலில்

(A) நற்றிணை
(B) ஐந்திணை ஐம்பது
(C) தமிழ்விடுதூது
(D) குடும்ப விளக்கு

15. 'கிளவழி நாற்பது' என்ற நூலின் சார்பு நூலாகக் கருதப்படுவது

(A) திருக்கோவையார்
(B) கலிங்கத்துப்பரணி
(C) புறப்பொருள் வெண்பாமாலை
(D) நந்திக்கலம்பகம்

16. 'சீர்காழில் பள்ளு' - பாடியவர்

(A) சீர்காழி சிவசிதம்பரம்
(B) அருணாசலக் கவிராயர்
(C) என்னயினாப் புலவர்
(D) எவருமில்லை

17. வேதநாயக சாஸ்திரியார் எழுதிய குறவஞ்சி நூல்

(A) பூபாலக் குறவஞ்சி
(B) பெத்லகேம் குறவஞ்சி
(C) வண்ணக் குறவஞ்சி
(D) தமிழரசி குறவஞ்சி

18. கோவை எந்தப்பா வகையால் பாடப்பெறுகிறது

(A) கலிவெண்பா
(B) விருத்தப்பா
(C) கட்டளை கலித்துறை
(D) எதுவுமில்லை

19. மண்திணிந்த நிலனும்; நிலனேந்திய விசும்பும் என அந்தாதி இலக்கியத்திற்குச் சான்றாக அமையும் பாடல் இடம் பெறும் இலக்கியம்

(A) திருவந்தாதி
(B) புறநானூறு
(C) சிலப்பதிகாரம்
(D) அகநானூறு

20. கலம்பக உறுப்புக்களுள் ஒன்று

(A) கைக்கிளை
(B) வனப்பு
(C) பெருந்திணை
(D) எதுவுமில்லை

21. பின் நவீனத்துவப் படைப்பாளியாகக் கருதத் தக்கவர்

(A) தமிழ்வன்
(B) கல்கி
(C) ஜெயகாந்தன்
(D) எவருமில்லை

22. மார்க்சியச் சார்புடைய இதழ்

(A) காலச்சுவடு
(B) தாமரை
(C) கணையாழி
(D) தீராநதி

23. ஜனரஞ்சக இதழை நடத்திவரும் தனியார் நிறுவனம் நடத்தும் இலக்கியச் சிற்றிதழ்

(A) நிகழ்
(B) பன்முகம்
(C) தீராநதி
(D) எதுவுமன்று

24. கண்ணப்பன் கிளிகள் என்னும் கவிதைத் தொகப்பு நூலை எழுதியவர்

(A) பாரதிதாசன்
(B) நா.காமராசன்
(C) தமிழ் ஒளி
(D) முடியரசன்

25. மணிக்கொடி எழுத்தாளர்களில் ஒருவர்

(A) ஜெயகாந்தன்
(B) சுஜாதா
(C) கு.ப.ராஜகோபாலன்
(D) ரகுநாதன்

26. இலக்கிய இயக்கங்களுள் குறிப்பிடத்தக்கது

(A) விடுதலை இயக்கம்
(B) பக்தி இயக்கம்
(C) குறியீட்டியம்
(D) எதுவுமன்று

27. சிலப்பதிகாரம் ஒரு வர்க்கப்போராட்ட நூல் என வாசித்தவர்

(A) மார்க்ஸ்
(B) க. கைலாசபதி
(C) கோ.கேசவன்
(D) தொ.மு.சி. ரகுநாதன்

28. வாய்மொழிப் பாடல்களிலிருந்து வந்தவையே சங்க இலக்கியம் என வாசித்தவர்

(A) க.கைலாசபதி
(B) மு. வரதராசன்
(C) ந. சஞ்சீவி
(D) தமிழண்ணன்

29. சங்க இலலக்கிய ஆராய்ச்சி அட்டவணை என்ற நூலை ஆக்கியவர்

(A) சி. பாலசுப்பிரமணியன்
(B) ச.ஞானசம்பந்தன்
(C) ந.சஞ்சீவி
(D) சுப. மாணிக்கம்

30. கைக்கிளை மற்றும் பெருந்திணை என்பன தமிழரின் அன்புடைக் காதல் ஒழுக்கங்களே என்றவர்

(A) த.ஏ. ஞானமூர்த்தி
(B) வ.சுப. மாணிக்கம்
(C) கதிர்மகாதேவன்
(D) மு. வரதராசன்

31. அகலிகையும் கற்புநெறியும் என்ற தலைப்பில் அடிக்கருத்தியன் ஆய்வு செய்தவர்

(A) அ.அ. மணவாளன்
(B) க. கைலாசபதி
(C) தமிழண்ணல்
(D) யாருமில்லை

32. தொல்காப்பிய நோக்கில் கற்பெனப்படுவது

(A) பெண்சடன் சம்பந்தப்பட்டது
(B) பெண்மனம் சம்பந்தப்பட்டது
(C) மண்ச்சடங்கு பற்றியது
(D) எதுவுமில்லை

33. தமிழ்நாட்டவர் வழக்காற்றியலுக்குக் குறிப்பிடத்தகுந்த பங்காற்றியவர்

(A) தே. லூர்து
(B) நா.வானமாமலை
(C) சு. சத்திவேல்
(D) ஆறு. இராமனாதன்

34. தமிழில் திறனாய்வின் நிலை

(A) வளர்ந்துள்ளது
(B) வளரவில்லை
(C) சற்றே வளர்ந்துள்ளது
(D) எதுவுமில்லை

35. உளவியல் திறனாய்வு முறைக்கு உலக அளவில் வழிவகுத்தவர்

(A) காரல் மார்க்ஸ்
(B) சிக்மண்ட் ஃபிராய்ட்
(C) லெவிஸ்ட்ராஸ்
(D) லக்கான்

36. தமிழில் ஒப்பிலக்கிய ஆய்வைத் தொடங்கியவர்

(A) தெ.பொ.மீ
(B) வ.வே.சு. ஐயர்
(C) வ.சுப. மாணிக்கம்
(D) தமிழண்ணல்

37. கருதுகோள் என்பது

(A) ஆய்வு முடிவு
(B) ஆய்வுச் சிக்கல்
(C) பரிசோதிக்கப்படாத கருத்து
(D) எதுவுமில்லை

38. உலக இலக்கியத்திறனாய்வுக் கொள்கையின் இலக்கிய ஆய்வுகட்குப் பொதுவானவையே

(A) சரி
(B) தவறு
(C) பண்பாட்டு நோக்கில் தவறு
(D) எதுவுமில்லை

39. இலக்கியக்கொள்கை-இலக்கியத்திறனாய்வு - இலக்கிய வரலாறு என்பவை உறவுடையனவே

(A) சரி
(B) தவறு
(C) ஓரளவிற்குச் சரி
(D) எதுவுமில்லை

40. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பதைக் கூறிய புலவர்

(A) ஔவையார்
(B) கணியன் பூங்குன்றன்
(C) திருவள்ளுவர்
(D) இளங்கோவடிகள்

41. மதுரைக் கண்ணங்கூத்தனாரால் பாடப்பெற்ற நூல்

(A) களவழி நாற்பது
(B) கார் நாற்பது
(C) இன்னா நாற்பது
(D) இனியவை நாற்பது

42. திருக்குறட் குமரேச வெண்பாவைப் பாடியவர்

(A) பொய்கையார்
(B) காரியாசான்
(C) செகவீரப்பாண்டியனார்
(D) நல்லாதனார்

43. விளம்பிநாகனாரால் பாடப்பெற்ற நூல்

(A) ஐந்திணை எழுபது
(B) திரிகடுகம்
(C) முதுமொழிக் காஞ்சி
(D) நான்மணிக்கடிகை

44. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை – என்று கூறிய நூல்

(A) உலக நீதி
(B) கொன்றைவேந்தன்
(C) நன்னெறி
(D) வாக்குண்டாம்

45. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம், ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம் – பாடியவர்

(A) ஔவையார்
(B) அதிவீரராம பாண்டியன்
(C) உலகநாத பண்டிதர்
(D) குமரகுருபரர்

46. அந்தணர் என்போர் யார்?

(A) அறவோர்
(B) சான்றோர்
(C) வணிகன்
(D) பார்ப்பான்

47. அணங்கு என்பது எது?

(A) பூதம்
(B) தெய்வமகள்
(C) துர்தேவதை
(D) பிசாசு

48. துன்பம் தருவனவற்றை நூலாகப்பாடிய புலவர்

(A) பரணர்
(B) நல்லாதனார்
(C) கபிலர்
(D) விளம்பிநாகனார்

49. பசிப்பிணி அறுத்துப் பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்

(A) கர்ணன்
(B) ஆபுத்திரன்
(C) சீவகன்
(D) காயசண்டிகை

50. சாவகநோன்பிகள் என்போர் யார்?

(A) ஒரு வேளை மட்டும் உண்பர்
(B) இரவில் மட்டும் உண்ணார்
(C) மூன்று வேளைகளிலும் உண்பர்
(D) இரு வேளை மட்டும் உண்பர்

51. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் அகப்பொருள் நூல்களாகத் திகழ்வன

(A) பன்னிரண்டு
(B) ஆறு
(C) பதினெட்டு
(D) பத்து

52. சங்கத்தை நிறுவிய சமணர் யார்?

(A) கண்ணன் சேந்தன்
(B) நக்கீரர்
(C) வச்சிரநந்தி
(D) கபிலர்

53. இந்து சாதி விளக்கம் என்ற நூலை எழுதியவர்

(A) ஆதி சங்கரர்
(B) சார்லஸ் சைமன்
(C) குமரகுருபரர்
(D) அம்பேத்கர்

54. வேதநாயகம் பிள்ளையால் எழுதப்பட்ட நூல்

(A) ஞான உலா
(B) பெண்மதி மாலை
(C) ஜெபமாலை
(D) பெத்லகேம் குறவஞ்சி

55. தமிழில் முதன் முதலாகத் தோன்றிய ஏளன இலக்கியம்

(A) முக்கூடற் பள்ளு
(B) பரமார்த்த குருகதை
(C) குற்றால குறவஞ்சி
(D) வேதியர் ஒழுக்கம்

56. யாருடைய பாடல்கள் 'நான்கு வேதங்கள்' என்று சொல்லப்படுகின்றது?

(A) பெரியாழ்வார்
(B) பேயாழ்வார்
(C) மதுரகவியாழ்வார்
(D) நம்மாழ்வார்

57. நபிகள் நாயகத்தின் மேல் கீர்த்தனைகள் பல பாடியவர்

(A) கா.மு. ஷெரீப்
(B) முகம்மது உசேன்
(C) உமறுப்புலவர்
(D) அப்துல் மஜீது

58. திரிமிளா சங்கம் யாரால் நிறுவப்பட்டது?

(A) வச்சரிநந்தி
(B) சந்திரகுப்தர்
(C) இராஜேந்திரன்
(D) நந்திவர்மன்

59. வடக்கே தோன்றிய சமணம் யார் மூலம் தமிழகத்தில் வந்தது?

(A) சந்திரகுப்தர்
(B) பத்திரபாகு முனிவர்
(C) வச்சிரநந்தி
(D) களப்பிரர்

60. வர்த்தமான தேவர் எழுதிய நூல்

(A) உதயண குமார காவியம்
(B) நாககுமார காவியம்
(C) யசோதரகுமார காவியம்
(D) சூளாமணி

61. உருவ வழிபாட்டை ஏற்பவர்கள்

(A) ஸ்தானகவாசியும் திகம்பரரும்
(B) சுவேதாம்பரரும் திகம்பரரும்
(C) ஸ்தானகவாசியும் சுவேதாம்பரரும்
(D) எவருமில்லை

62. ஆசீவக மதத்தைத் தோற்றுவித்தவர்

(A) ஆநந்தர்
(B) அனுருத்தர்
(C) மற்கலி
(D) காத்யாயனர்

63. ரேனியஸை, ஜி.யு.போப் பாராட்டியது

(A) தேர்ந்த தமிழ் அறிஞர்
(B) தைரியநாத சுவாமி
(C) ஒப்பிலக்கணத் தந்தை
(D) கிறிஸ்தவக் கம்பர்

64. திருமந்திரத்தில் அடங்கியுள்ள தந்திரங்கள்

(A) 3
(B) 6
(C) 9
(D) 12

65. பின் நவீனத்துவச் சிந்தனை முதன்மை கொடுப்பது

(A) ஆசிரியர்
(B) வாசகர்
(C) கோட்பாடு
(D) எதுவுமன்று

66. 'சோழநிலா' என்னும் நாவலை எழுதியவர்

(A) மு.மேத்தா
(B) சாண்டில்யன்
(C) ஜெயகாந்தன்
(D) புஷ்பாதங்கதுரை

67. 'தலை முறைகள்' என்னும் நாவலை எழுதியவர்

(A) இந்திரா பார்த்தசாரதி
(B) ராஜம் கிருஷ்ணன்
(C) திலகவதி
(D) நீலபத்மநாபன்

68. 'தோணி வருகிறது' என்னும் படைப்பின் ஆசிரியர்

(A) ஈரோடு தமிழன்பன்
(B) கண்ணதாசன்
(C) வைரமுத்து
(D) அப்துலரஹ்மான்

69. அடை சினை முதல் என்ற வரிசைப்படி வருவது

(A) வழக்காத்தல்
(B) வண்ணசினைச்சொல்
(C) வேறுபொருள் குறித்த ஒரு சொல்
(D) எதுவுமில்லை

70. கெடுவரல் பண்ணை ஆயிரண்டும்

(A) புலம்பல்
(B) அசைச்சொல்
(C) தொகைச்சொல்
(D) விளையாட்டு

71. 'கணவாயிற் கோட்டம்' என்பதற்கு அடியார்க்கு நல்லார் கூறுகிற பொருள்

(A) முருகன் கோயில்
(B) அருகன் கோயில்
(C) கண்ணன் கோயில்
(D) எதுவுமில்லை

72. சீத்தலைச் சாத்தனாரைத் 'தண்டமிழ் ஆசான்' எனப் பாரட்டியவர்

(A) சேரன் செங்குட்டுவன்
(B) இளங்கோவடிகள்
(C) புகழேந்தி
(D) எவருமில்லை

73. காப்பிய உறுப்புகளில் தமிழ்காப்பியங்களில் இடம்பெறாத ஒன்று

(A) சருக்கம்
(B) இயம்பகம்
(C) பரிச்சேதம்
(D) எதுவுமில்லை

74. ஐம்பெருங்காப்பியம் என்ற சொல்லைப் பயன்படுத்தியவர்

(A) சி.வை.தாமோதரம் பிள்ளை
(B) மயிலைநாதர்
(C) உ.வே.சா
(D) இளங்கோவடிகள்

75. பத்திரை, காளன் என்ற பாத்திரங்கள் இடம்பெறும் காப்பியம்

(A) வளையாபதி
(B) சூளாமணி
(C) நீலகேசி
(D) குண்டலகேசி

76. வெண்ணாவலுடையார் எழுதிய காப்பியம்

(A) நாககுமார காவியம்
(B) பெருங்கதை
(C) நீலகேசி
(D) யசோதர காவியம்

77. நீலகேசி எந்த சமயத்தைச் சார்ந்த நூல்

(A) சமணம்
(B) பௌத்தம்
(C) இந்து
(D) எதுவுமில்லை

78. பெரிய புராணத்தில் உள்ள மொத்த சருக்கங்கள்

(A) 02
(B) 63
(C) 13
(D) 06

79. இராமாயணத்தின் உத்திர காண்டடத்தைப் பாடியவர்

(A) கம்பர்
(B) ஒட்டக்கூத்தர்
(C) அம்பிகாபதி
(D) மண்டல புருடர்

80. தமிழ்க்காப்பிய மரபில் உட்பிரிவாக அமைந்துள்ள ஒன்றினைத் தண்டியலங்காரம் குறிப்பிடவில்லை

(A) இலம்பகம்
(B) சருக்கம்
(C) காதை
(D) பரிச்சேதம்

81. வெகுளி என்பது

(A) உருத்திரம்
(B) காமம்
(C) வியப்பு
(D) அற்புதம்

82. மாரியன்ன வண்கை

(A) வேற்றுமையணி
(B) பிறிதுமொழிதல் அணி
(C) உவமையணி
(D) எதுவுமில்லை

83. ஓரடியில் ஒன்பது எழுத்துக்கள் இடம் பெறுவது

(A) கழிநெடிலடி
(B) அளவடி
(C) சிந்தடி
(D) குறளடி

84. தொல்காப்பியர் கூறும் சீர்களின் எண்ணிக்கை

(A) 16
(B) 60
(C) 64
(D) 84

85. புரைதீர் காமம் புல்லிய வகை இடம் பெறும் திணை

(A) காஞ்சி
(B) கைக்கிளை
(C) பாடாண்
(D) வாகை

86. கற்பில் இடம் பெறும் மாந்தர் எண்ணிக்கை

(A) 12
(B) 6
(C) 10
(D) எதுவுமில்லை

87. காதல் என்பது

(A) பெயர்ச்சொல்
(B) வினைச்சொல்
(C) இடைச்சொல்
(D) உரிச்சொல்

88. உதிர்மச்கிளவியில்

(A) வல்லெழுத்து மிகும்
(B) மெல்லெழுத்துமிகும்
(C) சாரியைமிகும்
(D) ஒற்றுமிகும்

89. 'விசாரணை' என்னும் நாவலின் ஆசிரியர்

(A) லியோ டால்ஸ்டாய்
(B) ஃப்ரன்ஸ் காஃப்கா
(C) தஸ்தய்வ்ஸ்கி
(D) எர்னஸ்ட் ஹெமிங்க்வே

90. 'கரமேசோவ் சகோதரர்கள்' என்னும் நாவலின் ஆசிரியர்

(A) டோனி மாரிசன்
(B) தஸ்தய்வ்ஸ்கி
(C) வில்லியம் ஃபாக்னர்
(D) லியோ டால்ஸ்டாய்

91. 'அந்நியன்' என்னும் நாவலின் ஆசிரியர்

(A) சார்த்தர்
(B) காம்யூ
(C) அலெக்ஸாண்டர் குப்ரின்
(D) ஆர்தர் மில்லர்

92. 'காண்டாமிருகம்' என்னும் நாடகத்தின் ஆசிரியர்

(A) பெர்டோல்ஃப்ரெக்ட்
(B) இயொனெஸ்கோ
(C) சார்த்தர்
(D) பெக்கட்

93. 'புல்லின் இதழ்கள்' வெளியிடப்பட்ட ஆண்டு

(A) 1854
(B) 1855
(C) 1856
(D) 1857

94. பாப்லோ நெருடாவிற்கு இலக்கியத்திற்கான நோபல் பரிசு வழப்பெற்ற ஆண்டு

(A) 1964
(B) 1969
(C) 1971
(D) 1974

95. 'உங்கள் குண்டுகள் துளைத்த ஒவ்வொரு துளையிலிருந்தும் ஸ்பெயின் எழுகிறது' என்ற முழங்கியவர்

(A) பாப்லோ நெருடா
(B) கலீல் ஜிப்ரான்
(C) ஹோசிமின்
(D) இக்பால்

96. 'நிரபராதிகளின் காலம்' என்னும் ஜெர்மன் நாடகத்தின் ஆசிரியர்

(A) ஹான்ஸ் பெண்டர்
(B) ஹியூபெர்ட் ஃபிகெட்
(C) ஸீக்ப்ரீட் லென்ஸ்
(D) ஹைன்ரிச் புல்

97. 'செம்மீன்' என்ற மலையாள நாவலின் ஆசிரியர்

(A) வைக்கம் முகம்மது பஷீர்
(B) எம்.டி. வாசுதேவன் நாயர்
(C) கமலாதாஸ்
(D) தகழி சிவசங்கரம் பிள்ளை

98. 'பொம்பை வீடு' என்னும் நாடகத்தின் ஆசிரியர்

(A) ஆர்தர் மில்லர்
(B) பெர்னாட் ஷா
(C) ஹென்ரிக் இப்ஸன்
(D) செக்காவ்

99. 'நாகமண்டலம்' என்னும் நாடகத்தின் ஆசிரியர்

(A) பாதல் சர்க்கார்
(B) கிரீஷ் கர்னாட்
(C) சத்யஜித் ரே
(D) யூ.ஆர். ஆனந்த மூர்த்தி

100. தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட 'கடுங்காவல் என்னும்' நாடகத்தின் ஆசிரியர்

(A) பெர்டோல்ட் ஃப்ரெக்ட்
(B) ழெனே
(C) இயொனெஸ்கோ
(D) சார்த்தர்

---